**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2026-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25 -ம் நாள் புதன்கிழமை

**<u>O.S. No.72/2025</u>**

வாதி தரப்பு சாட்சியாகிய PW.1ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜாங்கம் | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | சேவு | கிராமம் | : | குமாரமங்கலம் |
| | | | தொழில் | : | கூலி வேலை |
| | | | வயது | : | 66 |

**<u>குறுக்கு விசாரணை</u>**

எனது தகப்பனார் பெயர் என்னவென்றால் சேவு ஆகும். நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது வீட்டு பிரச்சனை சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் சுமார் 5 வருடங்களுக்கு முன்பு இறந்தார். எனது தகப்பனாருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் நானும் எனது சகோதரி இந்திராகாந்தி இருவரும் வாரிசுகள் ஆவோம். எனது சகோதரியை இந்த வழக்கில் ஏன் சேர்க்கவில்லை என்றால் எனது சகோதரி திருமணம் ஆகி சென்றுவிட்டதால் சேர்க்கவில்லை. 1ம் பிரதிவாதியின் தகப்பனார் கணேசன் எனக்கு உறவினர் என்றால் சரிதான். கணேசன் எனது உடன்பிறந்த சகோதரர் என்றால் இல்லை. நான் எனது தகப்பனாரின் வாரிசு சான்றிதழை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். வழக்கில் 1ம் பிரதிவாதி எனது சகோதரனின் மகன் என்றால் சரியல்ல. 2 மற்றும் 3 பிரதிவாதிகளை வழக்கில் ஏன் வழக்காடிகளாக சேர்த்துள்ளேன் என்றால் எனது வீட்டை கேட்டு அடிக்க வந்ததால் அவர்களை இவ்வழக்கில் சேர்த்துள்ளன். 2 மற்றும் 3 பிரதிவாதிகளை வழக்கில் தேவையற்ற வழக்காடிகள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து யார் சொத்து என்றால் எனது தகப்பனார் சேவு சொத்தாகும். இன்று வரை வழக்கு சொத்து எனது தகப்பனார் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயரில் வழக்கு சொத்து இருந்து வருவதால் எனது சகோதரி இந்திராகாந்திக்கும் வழக்கு சொத்தில் உரிமை உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் அனுபவித்து வருவதை காட்டும் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி வீட்டு வரி ரசீதுகளை தாக்கல் செய்துள்ளார் என்றால் 1ம் பிரதிவாதிக்கு தனி வீடு உள்ளது. அதன் ரசீதுகளை தான் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் புல எண் தெரியுமா என்றால் தெரியும். அதன் விஸ்தீரணம் என்னவென்றால் சுமார் 2 குழி இருக்கும். வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை அனைத்தும் எனது மற்றொரு வீட்டின் ஆவணங்கள் என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் பத்தி 2ல் தாவா சொத்தை ஆண்டு அனுபவித்து

வருவதாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அதை அனுபவத்தை காட்டும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் அனுப்பியுள்ளேன். அந்த அறிவிப்பில் என்ன விபரம் கூறியுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1,2 பிரதிவாதிகளை காலி செய்வதற்கு எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் பிரதிவாதிகள் வீட்டினை காலி செய்யாமல் வருவதாக குறிப்பிட்டுள்ளேன் அவ்வாறு நான் 1,2 பிரதிவாதிகளை கேட்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வழக்கறிஞர் மூலம் பதிலறிவிப்பு அனுப்பினார்களா என்றால் அனுப்பினார்கள். அதிலுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதியின் தகப்பனார் கணேசன் எனது உடன்பிறந்தவர் என்றாலும், தாவா சொத்தை நான் கெட்ட எண்ணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்தேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்து சம்மந்தமாக 1ம் பிரதிவாதிக்கு ஆவணம் ஏதும் எழுதிக்கொடுத்தேனா என்றால் இல்லை. கடந்த 08.03.2022 அன்று நான் 1ம் பிரதிவாதிக்கு கிரய உடன்படிக்கை எழுதி கொடுத்தேன் என்றாலும் அதனடிப்படையில் 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தினை அனுபவித்து வருகிறார் என்றாலும் சரியல்ல. மேற்படி கிரய உடன்படிக்கையில் உள்ள சாட்சிகளை நீதிமன்றத்தில் விசாரணை செய்தால் உண்மை நிலவரம் தெரியும் என்றால் சரியல்ல. எனது அனுமதியின் பேரில் தாவா சொத்தில் உள்ள வீடு பழுதடைந்துள்ளதால் பின்புறம் அரசு வழங்கும் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் வீடு கட்டி பிரதிவாதிகள் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் அரசு அலுவலர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் வீடு கட்டும் போது நான் தடுக்க முயன்றேன். தாவா சொத்தில் நான் கேட்டுள்ளபரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றாலும், வழக்கு சொத்தில் அனுபவம் என்னிடம் இல்லை என்றாலும், வழக்கில் உரிய தரப்பினர்களை சேர்க்காததால் வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.25 19:17:01 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.